பொது சன நூலகம்




# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: ı வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 25 ஞாயிற்றுக்கிழமை 07 05 2000 VALAMPURI ஒலி: 14


★ இலங்கைக்கு உதவுவது குறித்து

# எதிர்க்கட்சிகளுடன் நாளை பிரதமர் வாஜ்பாய் ஆராய்வு!

(புதுடில்லி)

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்று வரும் யுத்தத்தை அடுத்து அண்டை நாடான இந்தியா இலங்கைக்கு உதவுவதற்கு எத்தகைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென விவாதிப்பதற்காக, பிரதான எதிர்க்கட்சிகளுக்கு இந்தியப் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய் அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையின் பாதுகாப்புக்கு தற்போது ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற நிலையில் இந்தியாவினுடைய உதவியை ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கா கோரியதை அடுத்தே பிரதமர் வாஜ்பாய் தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தையும் தனது கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழகத் தலைவர்களுடனும், தமிழக முதல்வர் கருணாநிதியுடனும் கலந்துரையாடியதன் பின் எதிர்க்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மனியில் ஆர்ப்பாட்டம்

(ஜேர்மன்)

இலங்கையில் பாதுகாப்பற்ற நிலையும் மனித உரிமை மீறல்களும் இடம் பெறுவதால் தம்மை அங்கு திருப்பி அனுப்ப வேண்டாம் எனக்கோரி ஜேர்மனியில் உள்ள தமிழர்களால் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

இப் பேரணியை ஜேர்மனி தமிழர் சுயநிர்ணய ஒருமைப்பாட்டுக் குழுவும் பேர்லின் ஈழத்தமிழர் நலன்புரிக் கழகம் உட்பட 13 அமைப்புக்கள் கூட்டாக ஏற்பாடு செய்திருந்தன. (வ-ச)

## இலங்கைக்கு மருத்துவ உதவி மட்டுமே வழங்க முடியும்

### ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவிப்பு

(புதுடில்லி)

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் யுத்தத்தில் இலங்கை அரசுக்கு மனி ாபிமான அடிப்படையில் மருத்துவ உதவிகளை மட்டுமே வழங்க முடியும் என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நேற்றுமுன்தினம் செய்தி

( 6ஆம் பக்கம் பார்க்க)

★ அரசுக்கு உதவ முன்வந்துள்ள இந்தியா

## துன்பப்படும் யாழ், வன்னி மக்களுக்கு உதவி செய்வதற்கு முன்வர வேண்டும்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்து மக்களும் வன்னி மக்களும் போரினால் துன்பங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்து வருகிறார்கள் என்றும் அவர்களுக்கு இந்தியா மனிதாபிமான உதவிகளை வழங்க வேண்டுமென்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. மாவை சேனாதிராசா தெரி

(6ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக் குழு இஸ்ரேல் செல்லும் இலங்கை முடிவுக்கு இஸ்ரேல் மகிழ்ச்சி

(கொழும்பு)

இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவுகளை மீண்டும் ஏற்படுத்துவது தொடர்பாக ஆராய அடுத்த சில தினங்களில் இலங்கையில் இருந்து ஒரு குழு இஸ்ரேல் செல்லவுள்ளது.

இதேவேளை இஸ்ரேலுடன் இலங்கை இராஜதந்திர உறவுகளை மீண்டும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு இந்தியப் படையை அனுப்புவதை நாம் விரும்பவில்லை

### ஜெயலலிதா தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் சண்டையில் ஈடுபட்டிருக்கும் இரு பகுதியினரும் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண இந்தியா தனது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்

இவ்வாறு அ.இ.அ.தி.மு.கழக பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய விமானப்படை தளபதி இன்று வருகிறார்!

இந்திய விமானப்படைத்தளபதி ஏயர்மார்ஷல் அனில் யஸ்வான்ட் ஐந்து நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இன்று கொழும்பு வருகிறார்.

கொழும்பில் ஐந்து நாட்கள் தங்கியிருக்கும் இந்திய விமானப் படைத்தளபதிக்கு, இலங்கை விமானப் படையினர் அணி வகுப்பு மரியாதை ஒன்றை வழங்கவுள்ளனர்.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர், ஜெனரல் அனுருத்த ரத்வத்த, முப்படைத் தள,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்ப்பு வாரம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு 3000ரூபா கொடுப்பனவு ஒன்றை வழங்கக்கோரி பொதுத்துறை தொழிற்சங்க கமிட்டி எதிர்வரும் திங்கள் முதல் நடாத்த இருந்த எதிர்ப்பு வாரம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என தொழில்சங்க அமைப்பாளர் டபிள்யு. எச். பியதாச அறிவித்துள்ளார். (வ)

## பிரதி அமைச்சர் கிரியல்ல தூதர்களை சந்தித்து உதவி கோருகிறார்

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலையை அடுத்து பிரதி வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல வெளிநாட்டு தூதர்களைச் சந்தித்து உதவி கோரி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வகையில் இதுவரை 20க்கும் மேற்பட்ட நாடுகளின் தூதுவர்களை சந்தித்து உதவி கோரியுள்ளதாகவும் அந்நாடுகளின் தூதுவர்கள் உதவி வழங்குவதற்கு சம்ம

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை, பல்கலைக்கழகங்களில் களியாட்டங்கள், கண்காட்சிக்குத் தடை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமையைக் கருத்திற்கொண்டு அரசாங்கப்பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் மறு அறிவித்தல் வரை எந்தவிதமான கலை நிகழ்வுகள், கண்காட்சிகள் போன்ற எதுவும் நடாத்தக் கூடாது என்று கல்விஉயர் கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த நிலை முடிவடையும் வரை இவ் உத்தரவு தொடருமென அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஆர். பி. குணவர்த்தனா அறிவித்துள்ளார்.

இவ் அறிவிப்பு அமைச்சின் செயலாளரினால் விசேட வர்த்தமானி அறிவிப்பு மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

★ பனங்கொட்டுக்குள் இருந்த குண்டை

## எடுத்துச் சென்ற போது வெடித்தது 1மாத குழந்தை உட்பட 4வர் காயம்

(புலோலி)

பனங்கொட்டுக்குள் கிடந்த குண்டொன்றை விறகு வெட்டி சீவனம் செய்யும் இரு நபர்கள் அப்பகுதி கிராம சேவையாளரிடம் எடுத்துச் செல்லவிருந்த சமயம் அக்குண்டு வெடித்ததில் துன்னாலையில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது,

புலோலி ஆனைவிழுந்தான் மயானப் பகுதியில் இருந்த பனங்கொட்டு ஒன்றை இரண்டு விறகு வியாபாரிகள் தூக்கி வந்து வீட்டில் வைத்து கொத்தியபோது அக்கொட்டுக்குள் குண்டொன்று காணப்பட்டதை அடுத்து அதனை துன்னாலையில்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அகதிகள் என்ற போர்வையில் போராளிகளும் தமிழகம் செல்கின்றனர்

இலங்கை அகதிகளுடன் தமிழ் நாட்டிற்குள் வர முயலும் இலங்கை போராளிகள் குறித்து தீவிர கண்காணிப்புக்களை மேற்கொண்டு வருவதாக இராமநாதபுர மாவட்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்,

யாழ் குடாநாட்டில் தோன்றியுள்ள அசாதாரண நிலையை அடுத்து வள்ளங்கள் மூலம் இலங்கைத்தமிழர் வருவது அதிகரித்துள்ளது. என்றும் தெரிவித்துள்ளார்

இவர்கள் அனைவரும் பாதுகாப்பாக மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

**A/Lபௌதிகவியல் 2001/2002**

பௌதிகவியல், இணைந்த கணிதம் அனுபவமும் பயிற்சியும்பெற்றஆசிரியரினால்மிகச் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளுடன் குறுகியகாலத்தில் முழுப்பாடத்திட்டமும் முடிக்கப்படும் தனிப்பட்ட முறையிலும் தொடர்பு தினசரி 3 மணிக்கு பின்பு R. பாலசுப்பிரமணியம் B. S.c (Coy.) Dpi. In Ed. 17/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(413)

**விற்பனைக்கு**

புதியNatioral J11 (ஜப்பான் தயாரிப்பு)டெக் விற்பனைக்குண்டு 396, நாவலர்வீதி, கைலாயபிள்ளையார் கோவிலடி, பழைய உதயன் பணிமனை ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(412)

**விற்பனைக்கு**

திருமந்திரம், திருவாசகம், திருக்குறள், ஞானக்கோவை, பகவத்கீதை, நற்சிந்தனை, இன்னும் பல தமிழ்நூல்கள் இருக்கின்றன. தொடர்பு 135 சிவன் கோயில் முன்பாக நல்லூர் யாழ்ப்பாணம் நேரம் மாலை 2.00-6.00மணிவரை

(414)


## பாலர் பாடசாலை

(பருத்தித்துறை)

யுத்த நிலை காரணமாக வடமராட்சி கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்து தும்பளை லூர்த்து மாதா ஆலயத்தில் தங்கி இருக்கும் சிறுவர்களின் நலன்கருதி இலங்கை செஞ்சிலுவைச் சங்க வடமராட்சிப் பிரிவினரால் பாலர் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பாலர் பாடசாலைக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கென சிறுவர் பாதுகாப்பு நிதியம் கடனடிப்படையில் நிதி வழங்கியுள்ளது.

(உ-11)

### யாழ். மாவட்டத்தில்

# சீரானமுறையில் பெற்றோல் வழங்க முழு அளவிலான ஏற்பாடு

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் இயங்கும் எரிபொருள் நிரப்புநிலையங்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அனுசரணையுடன் முத்திரையிடப்பட்டே எரிபொருள் விநியோகங்கள் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் மாதாந்தம் 190000 லீற்றர் பெற்றோலையும் 150000 லீற்றர் மண்ணெண்ணையையும், 750,000 லீற்ர் டீசலையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மக்களுக்கு வழங்கி வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் 25 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இயங்கி வருவதாகவும், இவற்றில் ஊர்காவற்றுறை, கொடிகாமம், உரும்பிராய், யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம் ஆகியன எரிபொருள் நிரப்புநிலையங்கள் பெற்றோல் விநியோகம் செய்வதில்லை.

மோட்டார் வாகனத் திணைக்கள புள்ளிவிபரங்களின்படி பதிவுசெய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கையின் பிரகாரமே எரிபொருள் விநியோகம் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் டீசலில் 686 டிராக்டர்களும், 417 இரண்டு சில்லு உழவு இயந்திரங்களும், 294 லொறிகளும், 130 மினிபஸ்களும், 100 அரச வாகனங்களும் இயங்கி வருகின்றன.

லொறிகளுக்கு மாதாந்தம் 2,25,000 லீற்றர் டீசல் ஒதுக்குவதெனவும், இவற்றில் அத்தியாவசிய தேவைக்காகப் பயன்படுத்தப்படும் லொறிகளுக்கு (கொன்வே லொறிகள்) 1,00,000 லீற்றர் ஒதுக்கத் தீர்மானிக்கப்பட்டது. இந்த லொறிகளுக்கு புலோலி, நல்லூர், பல்லாகம் ப. நோ. கூ. சங்க எரிபொருள் நிரப்பு நிலையங்களினூடாக டீசல் விநியோகிக்கப்படவுள்ளது. இவற்றிற்கென ஒதுக்கப்படும் 1,00,000 லீற்றர் எக்காரணம் கொண்டும் வேறு எத்தேவைக்காகவும் பயன்படுத்தப்பட மாட்டாது.

திணைக்கள வாசனங்களுக்கு யாழ். பல நோ. கூ. சங்க எரிபொருள் நிலையத்தில் 30,000 லீற்றர் டீசல் ஒதுக்கப்பட்டிருக்கும். மிகுதி 95000 லீற்றர் எரிபொருள் கோப்பாய், மருதனாமடம், மானிப்பாய், கைதடி ப. நோ. கூ. சங்க எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் சமமாக வழங்கப்படும்.

யாழ், மாவட்டத்தில் டிராக்டர்கள் இரண்டு சில்லு உழவு இயந்திரங்களுக்கு சாவகச்சேரிக்கு 10.000 லீற்றரும், கோப்பாய்க்கு 50000 லீற்றரும், கரவெட்டிக்கு 50,000 லீற்றரும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மினிபஸ்களுக்குத் தென்மராட்சித் தேவைக்கெனக் கைதடியில் 30,000 லீற்றரும் தீவகத்திற்கு 6,800 லீற்றரும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களுக்கு 1,20,000 லீற்றர் டீசல் வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள 1,50,000 குடும்பங்களுக்கு கிழமைக்கு 3 லீற்றர் வீதம் 18,00,000 லீற்றர் மண்ணெண்ணெய் தேவைப்படுகின்றது. இம்மண்ணெண்ணெய் பல நோ. கூ. சங்கங்கள் மூலம் வழங்கப்படவுள்ளன. விவசாயத் தேவைகளுக்கான 25,000 லீற்றர் மண்ணெண்ணெய் கமநலசேவைகள் திணைக்கள உதவி ஆணையாளரின் மேற்பார்வையில் வழங்கப்படவுள்ளது.

(52)

## திருமுறை பாராயணம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் திருவாதிரை தினத்தில் ஒவ்வொரு இல்லங்கள் தோறும் சென்று பன்னிரு திருமுறைப் பாராயணம் செய்து வருகின்றனர். இதன்படி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4. 00மணி முதல் தேவார இசைமணி சி. தில்லைமணி அவர்களின் தலைமையில் மானிபாய்வீதியில் உள்ளஓர் அன்பரின்இல்லத்தில் பன்னிரு திருமுறைப் பாராயணம் நடாத்தவுள்ளனர். (க)

### யாழ்ப்பாணத் தபாலகம்

# 8 கோடி ரூபா செலவில் விரைவில் புனரமைப்பு நடவடிக்கைகள்

## தபாலக வட்டாரங்கள் தகவல்

[ஈச்சமோட்டை]

யாழ்ப்பாணத் தபால் அலுவலகம் 8கோடி ரூபாசெலவில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த தபால் அலுவலகம் முன்னர் யாழ்ப்பாணத் தபால் அலுவலகம் இருந்த இடத்தில் நிறுவப்படும் என்றும் சேதமடைந்த தபால் கட்டடத்தை முற்றாக அகற்றிவிட்டு இப்புதிய தபால் கட்டடம் நிர்மாணிக்கப்படவிருக்கின்றது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பின்னர் நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகவுள்ளது.

இத்தபாலலுவலக கட்டட நிதிக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாவை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஒதுக்கியுள்ளார்.

அதே சமயம் காரைநகர் தபால் அலுவலகமும் 15 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-59)

## உற்சவம்

(ஊர்காவற்றுறை)

வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிறு காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 16 ஆம் திகதி செவ்வாய் பகல் 11 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (க-75)

# வங்காலைமக்களின்தேவைகுறித்து வன்னி எம்.பியிடம் முறையீடு

(யாழ்ப்பாணம்)

மன்னார் பகுதியின் வங்காலைக் கிராமத்தைச் சூழவுள்ள பத்து விவசாயக்குளங்களின் கீழ் உள்ள காணிகளில் நெற்செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிக்குப் பாராளுமன்ற உறுப்பினர் நேரடியாக விஜயம் மேற்கொண்டபோதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வங்காலை கிராமத்தின் பெரும்பகுதியை ஆக்கிரமிக்கும் கடலரிப்பைத் தடுப்பதற்கான கடல் அணைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

கடற்றொழிலாளர்களின் வசதி கருதி குளிரூட்டும் அறை ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி மக்களை போக்குவரத்துப் பாதை சீர்செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

மேற்படி சந்திப்பின்போது ஊர்ப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)


உ

அருள்மிகு

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி

# ஆலய மஹோற்சவம் 2000

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் நிகழும் விக்கிரம வருடம் சித்திரை மாதம் 26-ம் நாள் (08.05.2000) திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும்.

கொடியேற்றம் 08.05.2000 திங்கட்கிழமை காலை 9.30 மணி

தேர்த் திருவிழா 16.05.2000 செவ்வாய் காலை 9.00 மணி

தீர்த்தத் திருவிழா 17.05.2000 புதன் பி.ப 12.45 மணி

பகல் திருவிழா. தினமும் காலை 5.45மணிக்கும். மாலை திருவிழா மாலை 4.00 மணிக்குஆரம்பமாகும்.

கொடியேற்றத் தினமான 08.05.2000 திங்கள் காலை 7.00 மணிக்கு அழகு மிகு வெளி மணிமண்டபத் திறப்பு விழாவும் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

''அனைவரும் வருக அருளமுதம் பெறுக,'

ஆலய பரிபாலன சபையினர்

(இ-301)


### சாவற்கட்டு கடற்தொழிலாளரின்

# இழப்பீட்டுக் கொடுப்பனவாக 10ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது

(மானிப்பாய்)

சாவற்கட்டு மீனவவீட்டுத் திட்டபயனாளிகளின் எனைய சொத்துக்களின் இழப்பீட்டிற்கான முதலாம் கட்டக் கொடுப்பனவாக 44 குடும்பங்களுக்கு 10,000 ரூபா காசோலைக்குரிய கடிதங்கள் சண்டிலிப்பாய் பதில் பிரதேச செயலரினால்கடந்த 4 ந்திகதி ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் இடம் பெற்ற நடமாடும்செயலக சேவையின் போதுவழங்ப்பட்டது.

இந்த நடமாடும் செயலக சேவையின் போது யாழ். மாவட்டத்திலுள்ள கடல் தொழில் விரிவாக்க நிலையம் தேசிய வீடமைப்பு அதிகார சபை பிரதேச வைத்திய அதிகாரி, கால்நடை வைத்திய அதிகாரி, மின்சாரசபை, பிரதேசசபை, கல்வித்திணைக்களம், விவசாயத்திணைக்களம் காணித்திணைக்களம், பிறப்பு, இறப்பு ஆகியதிணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகளும் சுதுமலை தெற்கு சுதுமலை வடக்கு ஆனைக்கோட்டை சாவற்கட்டு உயரப்புலம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு பொதுமக்களின் பல்வேறு பிரச்சினைகளையும் இனங்கண்டுமிகச் சுலபமாக தீர்த்து வைத்தனர்.

முக்கிய விடயங்களுக்கு தீர்வு காணப்பட்டது.

ஜெயபூமி திட்டத்தின் கீழ் ஐந்துபேருக்குகாணி உறுதிகள் வழங்கப்பட்டது.

★நட்டஈட்டு விண்ணப்பம் தொடர்பான விண்ணப்பங்களைபரிசீலிப்பதற்காக வந்த விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பரிசிலனை செய்யப்பட்டு அதற்கான காணி உறுதிகளும் பெறப்பட்டன.

★வீடு எரிந்த ஒருவருக்கு சமூக சேவைப் பிரிவினரால் 400ரூபா நட்டஈடு வழங்கப்பட்டது என்பன அவற்றுள் சிலவாகும்.

மேலும் தேசிய விசேட அடையாள அட்டை மோட்டார்வாகனப்பதிவு நிவாரண முத்திரை, மின்சாரம், விவசாயம், கல்வி போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டது.

இதன் இரண்டாவது இடம்பெயர்சேவை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் விரைவில் இடம் பெறும்என்று நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

(க-120)

## சிரித்திடும் முடிப்பிள்ளையார் கொடி ஏறுகின்றான்

சித்திரை நிலாக்கள் பூக்கள் தூவின சிரித்திடும்
முடிப்பிள்ளையார் கொடி ஏறுகின்றான்.
நித்தமும் அழுதிடும் மக்கள் நிம்மதி பெற்றி -
முத்திரை பதித்த முடிப்பிள்ளையார் கொடி
வேலணைக் காற்றில் வேள்விகள் நடாத்திடும்
வெற்றிப் பிள்ளையார் கொடி ஏறுகின்றான்.
காலனை உதைக்கும் கணபதித் திருநாளில்
கண்ணீரும் செந்நீரும் அகலக் கொடியாம்.

வேலணை பாலா

(வேலணையூர் பெரியபுலம் மாக கணபதிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இக் கவிதை பிரசுரிக்கப்படுகிறது.)

### வடக்கு.கிழக்கு மாகாண

## செயலர்கள் மீது சட்ட நடவடிக்கை

## பொது சிற்றூழியர் சங்கம் முடிவு

(கொழும்பு)

வடக்கு.கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வட.கிழக்கு மாகாண அரசாங்க பொது சிற்றூழியர் சங்கம் முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக மாகாண அமைச்சுச் செயலாளர்களின் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட 94 ஊழியர்கள் ஒப்பமிட்டிருந்த கடிதம் ஒன்றினை வட. கிழக்கு மாகாண அரசாங்க பொது சிற்றூழியர் சங்கம் வட.கிழக்கு மாகாண ஆளுநர் அசோக விஜயவர்த்தனாவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

இவ்வருட ஜனவரி 24 ஆம் திகதி இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் போது வரும் மூன்று மாதங்களுக்கிடையில் நாம் முன்வைத்த பிரச்சினைகளுக்குதீர்வுகாண்பதாக சம்பந்தப்பட்டோர் வழங்கிய உறுதிமொழிகள் இன்று வரை நிறை வேற்றி வைக்கப்படவில்லை.

இந்நிலையிலேயே மாகாண அமைச்சின் செயலாளர் மீது சட்டநடவடிக்கை எடுக்க நேர்ந்துள்ளதென ஆளுநருக்கு எழுதியகடிதத்தில்குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

### வவுனியா வளாக

## பட்டமளிப்பு விழா திங்கட்கிழமை கோலாகலமாக இடம்பெறும்

வவுனியா வளாகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா வவுனியா மாநகர சபை மண்டபத்தில் எதிர் வரும் திங்கள் காலை இடம் பெறும்.

வளாகத்தின் முதல்வர் பேராசியர் பாலகிருஷ்ணன் இந் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குவார். இதில் 224 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளார்கள்.

பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பட்டம் பெறும் மாணவர்கள் ஆகியோர் பூங்கா வீதியிலுள்ள அலுவலகத்திலிருந்து மங்கள வாத்தியம் முழங்க ஊர்வலமாக அழைத்து வரப்படுவார்கள்.

மேற்படி பட்ட மளிப்பு விழாவை ஒட்டிய துரித ஏற்பாடுகள் மேற் கொள்ளப் பட்டுவருவதாக தெரிவிக்கப் படுகிறது. (க-59)

### யாழின் தற்போதைய நிலையை

## காரணமாகக் கொண்டு யு.என்.எச்.சி.ஆர் அதிகாரிகள் வெளியேறமாட்டார்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நிலவும் தற்போதைய அசாதாரண சூழ்நிலையை காரணமாகக் கொண்டு இங்கு செயற்பட்டு வந்த அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் ஒரு போதும் இங்கிருந்து வெளியேறமாட்டார்கள் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

அவர்கள் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; இடர்படும் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும்என்ற எமது செயற்பாட்டில் எப்போதும் மாற்றமிருக்காது மக்களுக்கு சேவை செய்வதே எமது தலையாயபணியாகும் என்றனர்.

தற்போதைய நிலையை காரணமாக கொண்டு சிம்பாப்பேயிலிருந்து வந்த கண்ணிவெடிபற்றும்மிதிவெடி அகற்றும் குழுவினர்யாழ்ப்பாணத்தை விட்டுவெளியேறியதைத்தொடர்ந்து இங்குள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளியேறலாம்என்ற கருத்து நிலவியது ஆனால் அக்கருத்து முற்றுமுழுதும் பிழையானது என்று சம்பந்தப்பட்டோர் தெரிவித்துள்ளனர். (க)

## அச்சுவேலி தபாலக ஊழியர் ஐந்துபேர் பதவிப் பிரமாணம்

(அச்சுவேலி)

அச்சுவேலி உப. தபால் நிலையத்தில் புதிதாக நியமனம் பெற்ற ஐந்து ஊழியர்களும் கடந்த செவ்வாய்க் கிழமை பதவிப் பிரமாணம் செய்து பொறுப்பை ஏற்றுக் கொண்டனர்.

அச்சுவேலியில் இடம் பெற்ற கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் இடம்பெயர் சேவையின் போதே மேற்படி பதவிப் பிரமாணவைபவமும் இடம் பெற்றது. (க-14)

## எரிபொருள் விற்பனையில் இலாபமடிக்க முற்படும் வர்த்தகப் புள்ளிகள்

(ஆவரங்கால்)

தற்காலயுத்த நிலையை பயன்படுத்தி எரிபொருள்களைபதுக்கும் முயற்சியில் சில வர்த்தகர்கள் ஈடுபட்டு வருவதாக புகார்தெரிவிக்கப் படுகிறது.

புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி ஆகிய பகுதியிலேயே அதிகளவில் இச் சம்பவங்கள் இடம் பெற்றுவருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

கூடுதல் விலைக்கு எரிபொருள் விற்கப்படுவது குறித்து படையினர் தீவிர கண் காணிப்பு செலுத்தி வருவதாகவும்சிலருக்கு எச்சரிக்கை விடுக்கப் பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு விற்கப்பட்ட மண்ணெண்ணெய் பரல்கள் நியாயமான விலை கொடுத்து படையினர அல்வர்த்தகர்களிடமிருந்து கொள்வனவு செய்யப் பட்டதாகவும் மேலும் அறியப்படுகிறது.

தற்சமயம் நிலையைபயன்படுத்தி பதுக்கல் கொள்ளை இலபமடித்தல்போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபடவேண்டாமென பொது அமைப்புக்கள் பல வேண்டுகோள்கள்விடுக்கப்பட்டதும் தெரிந்ததே. [க-57]

## மாதாந்த உதவிப்பணம் விநியோகம்

(அச்சுவேலி)

சித்திரை மாதத்திற்குரிய மாதாந்த உதவிப்பணம் வலிகிழக்கு, கோப்பாய் பிரதேச செயலகர் பிரிவிற்கு உட்பட்ட தபாலகங்களில் விநியோகிக்கப் பட்டு வருகின்றது. (க-14)

## சதுர்த்தி உற்சவம்

(அரியாலை)

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று 7 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் அக்கினி நாள் ஆரம்பத்தை முன்னிட்டு தொடர்ந்து 22 தினங்கள்தினமும் கலை 9மணிக்கு அபிஷேகமும் மாலை 5 மணிக்கு சதுர்த்தி உற்சவமும் இடம் பெறும். (க-106)

### சேதமடைந்த

## பண்ணைப்பாலத்தை புனரமைப்புச் செய்ய வீதி அபிவிருத்தி அதிகாரசபை அனுமதி

(ஈச்சமோட்டை)

மக்கள்பாவனைக்குமிகுந்த சிரமத்தினை அளித்துவந்த பண்ணைப் பாலத்தைத் புனரமைப்புச் செய்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய ஜுன்மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நயினை நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்திற்கு முன்னர் பாலத்தைப் புனரமைப்புச் செய்துமுடிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் முன்வந்துள்ளனர்.

மேற்படி பாலம் பழுதடைந்த நிலையில் அதனைப் பாவிபபோர் தாம் அனுபவித்துவரும் சிரமம் குறித்தும் பாலத்தைத் திருத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் சம்பந்தப்பட்டோர் செய்த முறைப்பாட்டினையடுத்து இவ்உடன்பாடு காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-59]

## கருத்தரங்கு

சங்கானை சண்டிலிப்பாய் பிரதேச செயலகங்களின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி முகாமையாளர் ஆகியோருக்கான சமுர்த்தித்திட்டத்தின் 1வது அறிமுக கருத்தரங்கு சங்கானை பிரதேச செயலக கேட்போர் கூட்டத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் யாழ். செயலக சமுர்த்தி ஆணையாளர் சிவபாதசுந்தரம் கலந்து கொண்டு சமுர்த்தித்திட்டத்தினால் மக்கள் அடையும் நன்மை, தொழிற்பாடு அலுவலரின் கடமைகள் பொறுப்புகள் என்பன பற்றியும் விரிவுரை நடத்தினார். [க-120]

## கார்பலத்த சேதம்

காரைநகர் ப.நோ கூ.சங்க லொறியும் மோட்டார்காரும் மோதியதில் மோட்டார் கார் பலத்தசேதமடைந்தது.

கஸ்தூரியார் வீதியும் நாவலர் வீதியும் சந்திக்கும் இடத்திலேயே இவ்விபத்து இடம் பெற்றது. (க)

## சுக்கிரனின் ஆதிக்கத்திற்குட்பட்ட இவர்கள்

## பிறரை கவர்ந்திழுக்கும் சக்திவாய்ந்தவர்கள்

### (சோதிட பலன்)

### எண் 6 (சுக்கிரன்)

எண் 6ஐப் பிறப்பெண்ணாகக் கொண்டவர்கள் சுக்கிரனின் ஆதிக்கம் பெற்றவர்கள் இவ்வெண்ணானது ஆங்கில மாதங்களில் வரும் 6,15.24ஆகிய திகதிகளில் பிறந்தவர்களைக் குறிக்கும்.

#### இவ்வெண்ணின் பொதுவான குணங்கள்

எண் 6இன் ஆதிக்கம்பெற்ற ஆண், பெண் இருபாலாரும் அழகான உடலமைப்புக் கொண்டவர்கள். இவர்கள் மற்றவர்களைக் கவரும் குணமுடையவர்கள் மற்றவர்களைத் தம்வசம் இழுத்து தாம் வசதியாக வாழும் தந்திரம் சரிவரத் தெரிந்தவர்கள்.

இவர்கள் அன்பும், கனிவான எண்ணங்களும் இனிமையான பேச்சும் நிறையப் பெற்றவர்கள் தம் கொள்கைகளை விட்டுக் கொடுக்காத மன உறுதியும் பிடிவாத குணமும்உடையவர்கள் ஆணவத்திற்கு விரோதிகளாக இருக்கும் இவர்கள் மற்றவர்களிற்குஅடிபணிய மறுப்பவர்களாகவும் இருப்பர்.

எண் 6 ஐச் சேர்ந்தவர்கள் காதல் வசப்பட்டவர்களாகவும் சிற்றின்பப் பிரியர்களாகவும் காணப்படுவர் ஆக்கசக்தியும் நிர்வாகத் திறமையும் உடையஇவர்கள் தடையின்றி முன்னேறி தங்களுடைய இலட்சியங்களைப் பூர்த்தி செய்வார்கள் பெரும்பாலும் இவர்கள்சுகபோக வாழ்க்கையை விரும்புபவர்கள்.

இவர்கள் கலை உள்ளம் படைத்தவர்கள் அதனால் கலைக்காகவும் கலைஞர்களுக்காகவும் முழுமனதுடன் பொருட்களை வழங்குவர். பெருமைக்காகவும், விளம்பரத்துக்காகவும் தான தருமங்கள் செய்பவர்கள்.

பணவிடயத்தில் மிகவும் பாக்கியசாலியான இவர்களிற்கு எந்த வழியிலேனும் பணம் வந்து கொண்டேஇருக்கும் ஆனந்தமாக வாழ விரும்பும் இவர்களிற்கு செலவும் இருந்துகொண்டேஇருக்கும்.

இவர்களுடைய மனம் எப்பொழுதும்அழகைஆராதனை செய்வதிலேயே நிலைத்திருக்கும் அழகான பொருள்களிலும். சங்கீதம், நடனம்முதலிய மகிழ்ச்சியைத் தூண்டும் விஷயங்களிலும் ஈடுபட்டிருக்கும். அனைவருடனும் நட்பு உணர்வுடன் பழகும் இவர்கள் எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் காணப்படுவர்.

#### இவ் எண்காரரின் தொழில் நிலை

எண் 6இன் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் கவிஞர்களாகவும், கலைஞர்களாகவும், பாடகர்களாகவும், சங்கீத வித்துவான்களாகவும், கலைத்துறைப் பத்திரிகை ஆசிரியர்களாகவும், எழுத்தாளர்களாகவும், அதிகார பதவிவகிப்பவர்களாகவும், வியாபாரிகளாகவும் விளங்குவர்.

கவர்ச்சி நிறைந்த இவர்களுக்குக் கலைத்தொழில் கைகொடுக்கும். மனத்திற்குப் பிடித்த கலை சம்பந்தமான எந்தத்தொழிலிலும் இவர்கள் பிரகாசிப்பார்கள்.

#### இவ் எண்காரரின் மணநிலை

இந்த எண்ணின் ஆதிக்கம் பெற்ற அனைவரும் மகிழ்ச்சியாகவே மணவாழ்வை அனுபவிப்பர். பெண்களுக்குத் தகுதி, எண், பொருத்தம் ஆகியன ஆராய்ந்து திருமணம் செய்து வைத்தால் மகிழ்ச்சிகரமான மணவாழ்வு அமையும்.

#### இவ்எண்காரரின் நோய்நிலை

இந்த எண்ணினர் ஆரோக்கியம் உடையவர்களாகக் காணப்பட்டாலும் உடல்வலி அசதி, அஜீரணம், வயிற்று உபாதை, போன்றவற்றால் சிரமப்படுவர், தோல், பிறப்பு உறுப்புகள் தொடர்பான நோய், இருதய பலவீனம், மலச்சிக்கல் போன்ற கோளாறுகள் வரக்கூடியசந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு.

(சு

எஸ். சுஜா
நல்லூர்

நூலகம் யாழ்ப்பாணம்

# பிலிப்பைன்ஸில் தொடரும் பணய நாடகம்

## அரசு பெருநெருக்கடியில் சிக்கித் தவிப்பு

(மணிலா)

இராணுவத்தினர் தம் மீது தொடுத்துள்ள உக்கிர தாக்குதல்களின் தன்மையைக் குறைக்கும் வகையில் பிலிப்பைன்ஸ் மோரோ இஸ்லாமிய விடுதலை இயக்கத்தினர் மேலும் 70 பொதுமக்களை பணயக்கைதிகளாகப் பிடித்துள்ளனர்.

தெற்கு பிலிப்பைன்ஸில் மேற்படி இஸ்லாமியத் தீவிரவாதிகளால் தடைசெய்யப்பட்ட நெடுஞ்சாலையொன்றில் பஸ்ஸில் பயணம் செய்த வேளையிலேயே இவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளதாய் தெரியவந்துள்ளது.

மார்ச் 20-ஆம் திகதி 27 பிலிப்பைன்ஸ் மக்களைக் கடத்தி சென்ற இம்முஸ்லிம் தீவிரவாதக்குழு அவர்களில் எவரையும் விடுதலை செய்யவில்லை.

அந்த நிலையில் ஏப்ரல் 23ஆம் திகதியன்று மலேசியாவின் உல்லாசப்பயண விடுதியொன்றில் இருந்து 21 வெளிநாட்டவரை பணயக் கைதிகளாகச் சிறைப்பிடித்தது.

இவர்களில் இருவர் இராணுவ, தீவிரவாதிகள் மோதல்களில் கொல்லப்பட்டதாக தற்போது அறிவிக்கப்பட்ட நிலையிலும் மீதிப் பேரை உயிருடன் மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் மேலும் 70 பொதுமக்கள் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளதுடன் இவர்கள் பற்றிய தகவல்கள் எவையும் வெளியிடப்படவில்லை.

இந்நிலைப்பாடானது பிலிப்பைன்ஸ் மக்களிடையே பெருத்த பய உணர்வையும், அரசாங்கத்துடனான அதிருப்தி நிலையையும் தோற்றுவித்துள்ளது.

அத்துடன் தம்மையும் பணயக் கைதிகளாகப் பிடித்து விடுவார்களோ என்கின்ற அச்சம் ஒவ்வொரு பிலிப்பைன்ஸ் வாசியையும் ஆட்கொண்டுள்ளது.

இந்தவேளையில், பணயக் கைதிகளின் உயிர்களுக்குப் பாதகம் ஏற்படா வகையில் அவர்களை மீட்கும் பணியை துரிதமாக மேற்கொள்ளுமாறு உலக நாடுகள் பலவும் பிலிப்பைன்ஸ் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதனையடுத்து இச்சிக்கல்களை சமாளிக்கும் வகையறியாது அரசு பெரு நெருக்கடியில் இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ)

## உலக தரிசனம்

## கொரியாக்களின் மகாநாடு குழம்புமா?

(சோல்)

வரும் ஜூன்மாதம் நட்புறவு ரீதியான உச்சிமாநாட்டை நடாத்தத் தீர்மானித்துள்ள நிலையில் வட - தென் கொரிய நாடுகளிடையே கருத்து முரண்பாடுகள் எழுந்துள்ளதாக தெரியவருகிறது.

தென்கொரியாவில் இருந்து அமெரிக்கப்படைகளை வாபஸ் செய்வதுபற்றி உச்சிமாநாட்டு நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாதென தென்கொரிய அதிபர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்தே இருநாடுகளுக்குமிடையே கருத்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதேசமயம் இவ்வாறான கருத்துமோதல்கள் மூலம் வருகின்ற ஜூன்மாத உச்சிமாநாட்டிற்கு ஏதாவது இடைஞ்சல்கள் ஏற்பட்டுவிடுமோவென இருநாட்டுச்சமாதான விரும்பிகள் பலரும் அச்சம் தெரிவித்துள்ளனர். (உ)

## கணனி உலகைக் கலக்கத்தில் ஆழ்த்தும் விபரீத எண்ணம் கொண்ட நாசகாரிகள்

(லண்டன்)

கணனி அமைப்புக்களின் மென்பொருட்களைத் தாக்கியழிப்பதன் மூலம், கணனியில் பதியப்பட்டுள்ள சகல விடையங்களையும் இல்லாதொழிக்கும் பணியில் நாசகாரிகள் சிலர் ஈடுபட்டுவருவது கணனிஉலகத்திற்குப் பெரும் தலையிடியை தோற்றுவித்துள்ளது.

கணனி அமைப்பின் மென்பொருட்களை தாக்கியழிக்க வல்லவைரஸ்ஸினை உருவாக்குவதில் பயங்கரவாதிகள் மட்டுமல்லாது குற்றம் புரியும் உந்துதல் மிகுதியாக கொண்டவர்களும், விபரீதமான விளைவுகளில் ஆர்வம் கொண்ட இளம் பராயத்தினரும் ஈடுபட்டு வருவது அறியப்பட்டுள்ளது.

மொலீஸா என்ற கணனியைத் தாக்கவல்ல வைரஸ் கடந்த ஆண்டு இலட்சக் கணக்கான கணனிகளை சிதைத்து உலகையே உலுக்கிய சம்பவம் நாம் அறிந்ததே.

தற்போது அதைவிடப்பன் மடங்கு ஆபத்தான ஐலவ்யூ என்ற வைரஸ், கணனிஉலகத்திடையே பெரும் குழப்பத்தினை உண்டுபண்ணியுள்ளது.

இதன் விளைவுகளினின்றும் தப்பும் மார்க்கம்பற்றி விரிவாக ஆராயப்பட்டு வருகிறது. (உ)

## சரணடைவு

[புதுடில்லி]

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அஸாமில் 75 கிளர்ச்சிக்காரர்கள் அண்மையில் உள்ளூர் அதிகாரிகள்முன் சரணடைந்துள்ளார்கள். [உ]

## 'பாஸிஸ அணியின் தந்தை' யூகோ. அதிபர் மீது அமெரிக்கா கண்டனம்

(வோஷிங்டன்)

யூகோஸ்லாவிய ஜனாதிபதி ஸ்லோபோடன் மிலோசிவிக்கை அமெரிக்கா மிகவன்மையாகக் கண்டித்துள்ளது.

அண்மையில் சேர்பிய நகரத்தில் இடம்பெற்ற யூகோஸ்லாவிய படைகளின் மூர்க்கத்தனமான நடவடிக்கைகளை அடுத்தே யூகோஸ்லாவிய அதிபர் மீதான அமெரிக்காவின் கண்டனப்பார்வை அதிகரித்துள்ளது.

இந்தச் சம்பவத்தினையடுத்து, பாஸிஸ அணியின் தலைவர்என மிலோசிவிக்கை வர்ணித்துள்ள அமெரிக்கா, சேர்பியாவில் கொடூரங்கள் புரிந்த மேற்படி நாட்டுப் பாதுகாப்புப் படைகளையும் கண்டித்துள்ளது. (உ)

## யாழ்ப்பாணத்தில் நிலவும் யுத்தநிலைக்கு

# மனிதாபிமான உதவிகள் வழங்க

# தென். இந்திய இராணுவம் தயார்

### இந்திய பத்திரிகை தகவல்

(சென்னை)

யாழ்ப்பாணத்தில் முற்றுகைக்குட்படுத்தப்பட்டிருக்கும் இலங்கை அரச படைகளுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்குவதற்கு தென் இந்திய இராணுவம் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தகவலை புதுடில்லியிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இச் செய்தி குறித்து இந்திய விமானப்படை அதிகாரி தனது பூரண மறுப்பை தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் இலங்கையின் தற்போதைய நிலையில் இந்திய மத்திய அரசு மேற்கொள்ளும் எந்தவித ஆக்கபூர்வமான முயற்சிக்கும் தமது பூரண ஆதரவு உண்டு என தமிழக முதல்வர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளதும் ஏற்கனவே தெரிந்ததே.

இலங்கையின் தற்போதைய நிலைப்பாட்டில் இந்திய மத்திய அரசு சரியான தருணத்தில் சரியான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்றும் அது குறித்து தற்பொழுது கருத்து கூறுவது அவசியமற்றது என்று இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அண்மையில் கருத்து வெளியிட்டதும் ஏற்கனவே தெரிந்ததே. (க)

## மலேசியாவில் கடமையாற்றும் இலங்கையர் நலன்பேண அதிகாரி

### நியமனமெனத் தெரிவிப்பு

(கோலாலம்பூர்)

மலேசியாவில் கடமையாற்றும் இலங்கையரின் சேமநலன் பேணுவதற்காக அங்குள்ள இலங்கைத் தூதரகத்தில் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகப் பிரதிப் பொது முகாமையாளர் செய்தி ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்த வருட முதல் நான்கு மாத காலத்தில் வேலைவாய்ப்பு பெற்று மலேசியாவிற்குச் சென்ற 428 இலங்கையர்கள் அநாதரவான நிலையில் அரசாங்கச் செலவில் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இதனாலேயே இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்த வருடம் முதல் 4 மாத காலத்துள் 400 இலங்கையர்கள் மலேசியாவில் வேலை வாய்ப்புப் பெற்றுச் சென்றுள்ளார்கள்.

அத்துடன் இந்த வருடத்திற்குள் மேலும் 400 இலங்கையர்கள் மலேசியாவிற்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லவிருக்கின்றார்கள் என்றும் தெரியவருகின்றது. (செ-சி)

## ஆசிய வளர்ச்சி வங்கி கூட்டத்தில் மந்திரி ஜஸ்வந்சிங்கா பேசுவார்

(புதுடில்லி)

ஆசிய வளர்ச்சி வங்கியின் 33 வது ஆண்டு யோசனைக் கூட்டம் தாய்லாந்தில் தொடங்குகிறது.

இந்திய குழுவிற்கு தலைமையேற்றுச் செல்லும் நிதியமைச்சர் ஜஸ்வந் சிங்கா நாளை ஆசிய வளர்ச்சி வங்கியின் கவனர்கள் கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

இதையடுத்து முதலீட்டாளர்கள் கடன் வழங்குவோர் வட்டமேசைக் கூட்டத்திலும் பேசுவார்.

ஆசிய வளர்ச்சி வங்கியில் 58 உறுப்பு நாடுகள் உள்ளன, 1956 இல் உறுப்புநாடுகளின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்காக இது ஏற்படுத்தப்பட்டது (து)

அறிவுக்கு அதிர்ஷ்டம்
தொடர்ந்து
வலம்புரியில்
உலக தரிசனத்தைப்
படியுங்கள், சேருங்கள், தயாராகுங்கள்

## கிரிக்கெட் நிர்வாகி

## ஐ. எஸ். பிந்தாவிற்கு வக்கீல்நோட்டீஸ் அனுப்பினார் பயிற்றுநர் கபில்தேவ்

(புதுடில்லி)

கிரிக்கெற் பந்தய பணப்பேரம் தொடர்பாக பேரம் பேசியதாக தம்மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டிற்கு எதிராக கபில்தேவ் வழக்குத் தொடர்ந்துள்ளார்,

முன்னாள் கிரிக்கெட் நிர்வாகி ஐ. எஸ் பிந்தாவிற்கு கபில் தேவ் வக்கீல் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

திறமைக்குக் குறைவாக விளையாடுவதற்கு ஒப்புண்டர், மனோ பிருயளக்கு கபில் தேவ் லஞ்சம் கொடுக்க முன்வந்தார் என்று ஐ. எஸ். பிந்தா குற்றஞ் சாட்டியிருந்தார்.

வக்கில் நோட்டீசில் உள்ள விபரங்கள் ஓரிரு நாட்களில் வெளியிடப்படும் என்று, கபில் தேவ் கூறினார் வக்கில்களிடம் பிரச்சினையை ஒப்படைத்து விட்டதாகவும் இனி அவர்கள் யோசனைப் படி செயல்படப்போவதாகவும் இவர் தெரிவித்திருக்கிறார். (து)

## மேலை நாடுகளின் வசதிகள் சிங்கப்பூரிலும் ஏற்படுத்த வேண்டும்

### சிங்கப்பூர் பிரதமர்

(சிங்கப்பூர்)

இங்கு வாழும் வெளிநாட்டவர்கள் படிப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதும் அங்கேயே தொழிலில் அமர்ந்துவிடுவதையும் தடுக்க வேண்டும் என்று சிங்கப்பூர் பிரதமர் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பொருளாதார சங்கத்தில் மேலும் பேசுகையில் வெளிநாடுகளில் உள்ள வாய்ப்புகளையும் வசதிகளையும் நமது நாட்டில் செய்து கொடுத்தால் படிக்கவும் வேலை வாய்ப்புக்கும் செல்வோரை தடுக்கலாமென்றுகுறிப்பிட்டார்

ஐரோப்பிய நாடுகளின்வசதிகளை நமது நாட்டிலும் உருவாக்க வேண்டும் என்று பிரதமர் மேலும் குறிப்பிட்டார். (து)

## பிரேசில் நாட்டின் பெருவிருது பெறும் இந்திய அறிஞர் பார்த்தசாரதி

(புதுடில்லி)

1990 ஆம் ஆண்டுகளில் பிறேசிலில் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு மிகச்சிறந்த பணியாற்றியதற்காக வெளி நாட்டுப் பிரஜைகளுக்கான தனது உயர்ந்த விருதை பாரதப்பொருளியல் அறிஞர் ஒருவருக்கு வழங்கிக் கௌரவித்துள்ளது.

சர்வதேச உறவுகளில் பொருளாதார வளர்ச்சிக்கானபாரதசபையில் பணியாற்றும்பார்த்தசாரதிசோமருக்கு (கமாண்ட ஒப்ஆடர் ஒவ் சதேண் புளக்) என்ற விருதை வழங்கிக் கௌரவித்தது.

பொது சன நூலகம்

உலகத்தோடு ஒட்ட
ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்.
- குறள்

# வலம்புரி

## மனிதம் தழைப்பின்!

இந்து நாகரிகத்துறைத் தலைவர் பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயரின் அடக்கமும் தற்பெருமையில்லா தகவும் பெரிதும் பாராட்டவேண்டியதொன்று. மக்கள் மயமாக அறிஞர் குழாம் வாழப் பழகுதல் சாலச் சிறப்புடைய தொன்றாகும், அடக்கம் என்பது ஆற்றலின் மேம்பாடு போலும். முற்றிய செந்நெல் நிலமகளை நோக்கி அடக்கமாக வளைந்து நிற்பதைப் பார்த்திருக்கிறோம்.

'பாரதி என்றொரு யுக புருஷன் கவிம்மைபொழிந்ததும் மக்களோடு மக்களாய் வாழ்ந்ததனாலேயாம். அந்த அந்தணச் செம்மல் அறவோன் என வேண்டும். காரணம் செந்தண்மை பூண்டு மக்கள் விடிவுக்காய் சொல்லும் செயலுமாய் வாழ்ந்த ஒரு வாழ்வியலாலெனலாம்'

அன்பகத்தில் கோமாதா பூஜை. முதன்மை விருந்தினராய் அழைக்கப்பட்டவர் கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள். துறைத் தலைவர் பீடத்திலிருந்து இறங்கி வந்தார். முதன்மை விருந்தினர் கௌரவத்திலிருந்தும் கணப்பொழுது விலகி நின்றார். இறையோடு இணைந்து, மக்களை ஆறுப்படுத்த, பூஜை, செய்தல் அன்னவர் நெறி என்பதை அகமார உணர்ந்தார். திடுமென கோ பூஜை செய்ய எவ்விதபிகுவுமின்றி ஆயத்தமான பண்பட்ட உள்ளத்தையே உவந்து நின்றனர் சைவ பெருமக்கள்.

பதவியும் பணமும் பக்குவப்படாதஉள்ளங்களுக்கு எத்தகைய பயனையும் தரமாட்டாது. ஏனோ தானோ என்ற வாழ்வியல் அரங்கில் வட்டாடி ஒய்தல் தான் மிச்சமாகும். இங்கு இந்த நிறைகுடம் இந்து நாகரீகத் துறைக்கு அணியெனத் திகழ்கின்றது. அன்னாரின் குடை நிழலில் உருவாக்கம் பெறும் பட்டதாரிகளும் சமூகமயப்பட்ட சாத்வீகர்களாக ஒளிர்வார்களாக.

ஐயரின் ஆற்றலுக்கு அடக்கம் ஒளியும் உயர்வும் கொடுக்கின்றது. இத்தகைய மனித உள்ளங்களையே உலகம் வேண்டி நிற்கின்றது. மனிதம் தழைப்பின் மண் சிறக்கும். மண்ணின் புலர்வு சீரியோர் மாட்டே என்பதை சிந்தைகொள்வோமாக.

- அன்புடன் ஆசிரியர்

# வீடுகள் தோறும் திருமுறை பாராயணத்தை நாளும் ஓதி நற்பயன்கள் பல பெற்றிடுவோம்

நூறு வருடங்களுக்கு முன் மனிதன் வாழ்ந்த வசதிகளுக்கும் இன்று மனிதன் பெற்றுள்ள வாழ்க்கை வசதிகளுக்கும் உள்ள வேற்றுமை சிறு சிந்தனையினாலேயே தெளியப்படும்.

நூறு வருடத்திற்கு முன் செயற்பட்டதிலும் பார்க்க இப்போ நம் ஆன்மீக வளர்ச்சி பற்றி அதிகம் செயற்பட வாய்ப்பும், தேவையும் உள்ளன. நூறு வருடத்திற்கு முன்வசதியாக- பொருத்தமாக இருந்த பல செயல்கள் இன்று சிரமமானவையாகவும், நூறு வருடத்திற்கு முன் இயலாதிருந்த பல செயல்கள் இன்று சுலபமானவையாகவும் மாறியுள்ளன.

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் திருவிழாக் காலத்தில் திருமுறைப்பஜனையை நிகழ்த்த நாவலர் பெருமான் தமிழ் நாட்டிலிருந்துஓதுவார்களை அழைத்து வரவேண்டியிருந்தது. இன்று நம் மத்தியிலேயே பண் தெரிந்த பலர் இருக்கிறார்கள்.

நம் மத்தியில் பண் பயிற்சியையும், திருமுறை உணர்ச்சியையும் அதிகரிக்கச் செய்யவும் திருமுறை மூலம் சிவனருளைப் பெறவும் திருமுறைப் பாராயணத்தை ஆலயங்கள் தோறும் மட்டுமன்றி வீடுகள் தோறும், மடங்கள் தோறும், பாடசாலைகள் தோறும், வாசிகசாலைகள் தோறும் என அதிகரிக்கச் செய்தல் அவசியம்.

தமிழ் நாட்டில் தமிழிலும், சைவத்திலும் தேர்ச்சியும் ஈடுபாடும் கொண்ட அன்பர் ஒருவர் திருவாதிரை நட்சத்திரம் தோறும் பல ஓதுவார்களை அழைத்து திருமுறைப் பாராயணத்தினை நிகழ்த்தியதோடு பாராயண முடிவில் பாராயணம் செய்த திருமுறைகள் பற்றி விளக்க உரை நிகழ்வுகளையும்இடம்பெறச்செய்து, அப்படித் திருமுறை ஓதியவர்கள் விளக்கவுரை செய்தவர்களை நன்கு சன்மானமளித்து தன் பொருளை சிவ் அருளாக மாற்றிய செய்தி ஒரு தமிழக ஆதீன சஞ்சிகையில் பிரசுரமாகியிருந்தது.

இதனை முன்னோடியாகக் கொண்டு நாமும்இல்லங்கள் தோறும் திருமுறை வல்லார் மூலம் திருமுறைப்பாராயனத்தை நிகழ்த்துவது நன்று. சிவபெருமானுக்குரிய திருவாதிரை நட்சத்திரத்தையும் அந் நட்சத்திரத்தன்று திருமுறை ஊடாக சிவபெருமானையும் வணங்க திருமுறைப் பாராயணம் நல்ல சாதனமாகும். இதன்படி அகில இலங்கைத் திருமுறை மன்றம் இம் முயற்சியில் ஈடுபட்டிருப்பது மிகவும் போற்றுதற்கு உரியது.

பெரிய புராணத்தில் துதிகப்படுகின்ற நாயனார் ஒருவர் திருவாதிரை தோறும் சிவனடியார்களை தம் இல்லத்துக்கு அழைத்து பூசித்து ஒவ்வொரு பவுண் காணிக்கை சமர்ப்பித்ததாக ஒரு செய்தி உண்டு.

இக்காலத்தில் வீடுகளில் நிகழும் சமய நிகழ்ச்சிகளில் நிகழ்ச்சி முடிவில் விருந்திடும் முறை மிகவும் அர்த்தமற்றதாக மாறிவிட்டது. விருந்துண்பவர் மனத்தில் இறை சிந்தனையைப் புறக்கணித்து வயிற்றில் உணவைச் சுமந்து செல்லும் அவலமே மிஞ்சிவிடுகின்றது. சிவபெருமான் கருணையால் உணவுக்குத் தட்டுப்பாடில்லாதவர் பலர்- பத்திய உணவு நியதி உடைய பலர் இப்படியான விருந்துகளால் பாதிக்கப்படுகின்றனர்.

இவற்றுக்கு மேலாக பலருக்கு நல்ல விருந்து கொடுக்கும் வாய்ப்பு இல்லாத பலர் தங்கள் வீடுகளில் சமய நிகழ்ச்சிகளை நிகழ்த்த எண்ணுவதே இல்லை. இப்படியான நெருக்கடிகளைத் தவிர்க்கக் கூடியதாக திருமுறைப் பாராயணத்தை ஒழுங்கு செய்துசிவப்பொலிவு சிவனருள் திருமுறை பரவல் என்பன நிகழ வேண்டும்.

திருவாதிரையில் அன்றி தம் பிறந்த நட்சத்திரம் போன்ற சந்தர்ப்பங்களிலும் வீடுகளில் திருமுறைப்பாராயணத்தை நிகழ்த்த முயலல் சிறப்பு. (சு)

**பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்**

# ஓய்வு நாளை அர்த்தம் ஆக்குவதன் மூலம் மனித மாண்பை மேலும் மெரு கூட்டலாம்

'ஓய்வு' என்பது நாம் எமது அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்கும் ஒரு நிகழ்வு. இதன் தாற்பரியமோ ஆழ்ந்த, நிறைபான, கருத்தாழம் மிக்க வெளிப்பாடாகும். ஒரு மனிதனின் உடற் சோர்வை இதன் மூலம் நீக்கிக் கொள்ளலாம். உள அமைதியைப் பெறலாம். இது சாதாரண மனித மாண்பின் வெளிப்பாடே ஆகும். எனவே மனித தேவைகளில் ஓய்வும் முக்கியமே என்பது வெள்ளிடைமலை,

இதணைப்பரிசுத்த வேதாக (இணைச் சட்ட 5;12-15 வரையுள்ள வசன) மும் எமக்கு வெளிக்கூட்டி நிற்கின்றன. ''உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கட்டளையிட்டபடி ஓய்வு நாளைப் புனிதமாகக் கடைப்பிடி''. உலகை, மனிதனை, உயிரினங்களைப் படைத்த அதற்கு வாரத்தின் இறுதி நாள். கடவுள் மனிதன் மேல் கொண்டுள்ள அளவற்ற அன்பை, அதன் வெளிப்பாட்டைச் சிந்தித்து நன்றி கூறும் கடமையும் எனக்குண்டல் விண்ணரசின் பேரின்ப வாழ்வில் பங்கு கொள்ளும் புனித நிலையை நாமும் பெறறவர்களாவோம். ஆதலின் இதற்காக இறைபடைப்பில் ஒரு நாளை ஓய்வாகப்பயன்படுத்துவது முக்கியமே.

பரம் பொருளாகிய இறைவன் மீட்பின் உரிமையாளர்களாக இஸ்ரேலியராக்கேயின் பன்னிருகோத்திரங்களைத் தெரிவு செய்கிறார். இவர்களின் நானூறு ஆண்டுகள் அடிமை வாழ்வை மோசேயின் தலைமைத்துவத்தில் மீட்ட நிகழ்ச்சியினை, இறை அன்பின் உச்ச நிலையை கிறிஸ்தவர்களாகிய நாமும் நினைவு கூர வேண்டாமா? வேண்டும். சாயலை நீ மறக்கலாமா? கூடவே கூடாது. எனவே ஓய்வு நாள் உனக்குத் தேவை என்பதை உன் கடின மனம் உணர்கின்றதல்லவா.



பட்டது. மனிதர் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை'' ஆதலால் ஓய்வு நாளும் மானிட மகனுக்குக் கட்டுப்பட்டதே என இயேசு கூறுவதை நாம் அவதானித்தல் சலச் சிறந்ததாகும் இந் நிகழ்வின் மூலமாக கிறிஸ்து எம்மைச் சிந்திக்கத் தூண்டுவது மாத்திரமல்லாது ஓய்வு நாள் மனிதர்களுக்கு முக்கியமானது என்பதனை உய்த்துணர வைக்கின்றார்.

என்வே ஓய்வு நாட்களிற் கிறிஸ்தவன் எவ்வாறுதன்னை

**பி. திருஞானசீலன்**
(நீவக வலய ஆசிரிய ஆலோசகர்)

## பரம பிதா காட்டிய பாதை

இறைவன் அவை ஒவ்வொன்றினதும் தேவைகளை. பயன்பாட்டை நன்கறிந்தவர். ஆதலின் மேலே கூறிய புனித வார்த்தையில் தென்படும் கடவுள், கட்டளை. புனிதம் ஆகியவற்றின் கருத்தாழம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதே.

''கடவுள்'' என்பது எமது ஊனக்கண்ணால் காணமுடியாத, சுவைக்க முடியாத ஒரு பரம் பொருள். 'கட்டளை' என்பது காண, சுவைக்க முடியாத அப்பரம் பொருளைக் காண்பதற்கு, சுவைப்பதற்கு தாம் வாழ வேண்டிய கிறிஸ்தவ வாழ்வு. 'புனிதம்' என்பது கட்டளையை அனுசரித்து வாழ்ந்தால் நாம் பெற்றுக் கொள்ளக் கூடிய புனிதம். ஆதலின் கடவுள் கட்டளையின், ஓய்வு நாளையும் கடைப்பிடித்தால் லவா? அதற்கே இந்த ஓய்வு நாள் நாம் கொண்டாட வேண்டிய விதிமுறைகளையும் (தி.பா. 81:2-7,9:10) மிக அழகாக திருப் பாடல் ஆசிரியர் விளக்குவதையும், அதன் மகிழ்வையும் நாம் உய்த்துணரலாம். மகிழ்ந்து, புகழ்ந்து, இன்னிசை எழுப்புங்கள், இனிமையாய்ப் பாடுங்கள், எக்காளம் ஊதி அகமகிழுங்கள்போன்றசெயற் தொடர்களில் மன அமைதியின் வெளிப்பாட்டினை நாம் பெறமுடியும். எனவே மன அமைதி ஓய்வின் மூலமே பெற்றுக் கொள்ளக்கூடிய மனித பண்பு என்பது வெளிப்படை இதுவே நீதி நெறியுமாகும் இந்த மன அமைதியை நாம் பெற உன் சுமையை, கைகளில் விடுதலையை உனக்கு தந்தவர் இறைவனே எனவே அவரின் இரக்கச்

இதனையே கொரித்தியருக்கு எழுதிய திருமுகங்களிலும் புனித பவுல் விளக்குகின்றார். (2 கொரி 4:6-11) அதுவே கிறிஸ்துவின் திருகுகத்தில் வீசும் அறிவொளி இன்னல், துன்பம், முழப்பம். வீழ்த்தல் போன்ற எந்த நிகழ்வாலும் கிறிஸ்துவின் திருமுக அறிவொளியில் நாம் புடம் போட்ட தங்கம்போல் மிளிர்கின்ரோம் இறுதியாக ஜேசு கிறிஸ்துவினுடைய ஓய்வுநாள் பற்றிய செய்தியை 'கைகூப்பியவர் ஓய்வு நாளில் நலமடைதல்' எனும் தலைப்பிற் நற்செய்தியாளன் புனித மாற்கு அழகாகச் சித்தரிக்கின்றார். ''ஓய்வு நாள் மனிதருக்காக உண்டாக்கப் இறைவனோடு ஒன்றிப்பது ஏன் இறைவனை அணுக வேண்டும், அதனால் என்ன பலன் எனும் கேள்விகளுக்கெல்லாம் கிடைக்கும் நிறைவான பதில் என் மனப் பலகீனத்தால் களைக்க, சலிப்படைய வைத்த எனது உள்ளத்திற்கும், ஆன்மாவிற்கும் ஓய்வைக் கொடுத்து அந்த ஓய்வில் இறைவனைத் தியானிப்பதால் பெறும் மன நிறைவே என்னை நித்திய பேரின்ப வாழவிற்கு அழைத்துச் செல்கின்றது என்பதே இதுவே கிறிஸ்தவனின் நிறைவான வாழ்வு நிறைவான வாழ்வின் பெறு பேறும், விண்ணரசில் நாம் அடையும் பேரின்பமும் ஆகும். (சு)

# காணிபெற நடவடிக்கை

(புலோலி)

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியின் அபிவிருத்திகருதி கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் பாடசாலைக்கு அருகாமையில் உள்ள142 பரப்புக்காணி சுமார் 10 இலட்சம்ருபாவுக்குப் பெற்று கல்லூரிக்கு வழங்கவுள்ளது.

கல்லூரியின் மேற்குப்பக்கமாகவுள்ள காணியையே இச்சங்கம் பெறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (சி-62)

# 2000/2001ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளிகள்

| மாவட்டம் | வைத்தியதுறை | பல் மருத்துவம் | மிருக வைத்தியம் | விவசாயம் | உணவு போஷாக்கு | உயிரியல் விஞ்ஞானம் | பொறியியல் (எம். பி. ஐ) | பொறியியல் (ஈ. எம்) | பொறியியல் [ரீ. எம்] | குவான் டிடி சேர்வே | கணனி விஞ்ஞானம் | பௌதிக விஞ்ஞானம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 288 | 285 | 282 | 258 | 254 | 261 | 274 | 264 | 264 | 261 | 269 | 219 |
| கம்பஹா | 276 | 275 | 273 | 248 | 246 | 249 | 257 | 253 | 251 | 249 | 253 | 208 |
| களுத்துறை | 277 | 274 | 272 | 249 | 247 | 250 | 264 | 259 | 263 | 260 | 263 | 206 |
| மாத்தளை | 269 | 268 | 267 | 251 | 248 | 242 | 242 | 239 | 240 | 237 | 238 | 199 |
| கண்டி | 281 | 280 | 279 | 254 | 251 | 253 | 263 | 259 | 260 | 256 | 261 | 210 |
| நுவரெலியா | 219 | 217 | 216 | 201 | 190 | 191 | 185 | 182 | 182 | 181 | 224 | 200 |
| காலி | 288 | 285 | 282 | 258 | 255 | 256 | 266 | 265 | 264 | 262 | 265 | 216 |
| மாத்தறை | 286 | 285 | 282 | 259 | 252 | 253 | 263 | 257 | 259 | 256 | 262 | 208 |
| ஹம்பாந்தேட்டை | 274 | 272 | 269 | 257 | 249 | 245 | 242 | 239 | 237 | 236 | 235 | 192 |
| யாழ்ப்பாணம் | 281 | 279 | 278 | 256 | 249 | 250 | 270 | 264 | 264 | 262 | 267 | 212 |
| கிளிநொச்சி | 246 | 253 | 243 | 234 | 228 | 219 | 246 | 245 | 240 | 237 | 244 | 198 |
| மன்னார் | 223 | 217 | 215 | 202 | 199 | 185 | 211 | 204 | 184 | 183 | ★ | 192 |
| முல்லைத்தீவு | 253 | 247 | 245 | 233 | 228 | 223 | 262 | 252 | 247 | 243 | 246 | 209 |
| வவுனியா | 269 | 264 | 261 | 253 | 251 | 244 | 267 | 255 | 248 | 250 | 242 | 221 |
| திருகோணமலை | 255 | 254 | 253 | 237 | 233 | 225 | 223 | 222 | 219 | 218 | 218 | 181 |
| மட்டக்களப்பு | 258 | 255 | 254 | 244 | 242 | 232 | 244 | 242 | 239 | 240 | 238 | 191 |
| அம்பாறை | 262 | 261 | 259 | 248 | 244 | 236 | 222 | 220 | 217 | 217 | 216 | 180 |
| புத்தளம் | 265 | 264 | 261 | 251 | 241 | 241 | 240 | 237 | 233 | 234 | 232 | 186 |
| குருணாகல் | 278 | 277 | 276 | 256 | 250 | 253 | 257 | 256 | 255 | 252 | 254 | 200 |
| அனுராதபுரம் | 269 | 267 | 265 | 253 | 243 | 243 | 211 | 208 | 204 | 199 | 203 | 180 |
| பொலன்னறுவை | 234 | 233 | 232 | 218 | 216 | 210 | 192 | 188 | 180 | ★ | ★ | ★ |
| பதுளை | 257 | 256 | 255 | 242 | 234 | 226 | 222 | 221 | 220 | 216 | 218 | 181 |
| மொனராகல | 236 | 235 | 234 | 222 | 213 | 209 | 194 | 182 | ★ | ★ | 188 | ★ |
| கேகாலை | 274 | 273 | 272 | 257 | 247 | 248 | 258 | 254 | 253 | 249 | 257 | 209 |
| இரத்தினபுரி | 268 | 267 | 264 | 247 | 239 | 240 | 238 | 233 | 237 | 232 | 234 | 200 |

| மாவட்டம் | முகாமைத்துவம் | பெருந்தோட்ட மு, கா | முகாமைத்துவம் [ஏ] | முகாமைத்துவம் (பி) | வாணிகவியல் | சட்டம் | கலை | கலை [எஸ். ஏ. பி.] | கலை [எஸ். பி.] | நில அளவை | பிர. விஞ்ஞானம் உயிரியல் | பிர. விஞ். [பௌதிகவியல்] |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 283 | 278 | 265 | 264 | 267 | 293 | 262 | 265 | 258 | 217 | 253 | 206 |
| கம்பஹா | 279 | 277 | 264 | 265 | 265 | 290 | 267 | 265 | 358 | 217 | 246 | 204 |
| களுத்துறை | 277 | 276 | 263 | 265 | 265 | 299 | 267 | 265 | 258 | 231 | 246 | 203 |
| மாத்தளை | 258 | 275 | 257 | 272 | 246 | 296 | 267 | 265 | 258 | 219 | 241 | 192 |
| கண்டி | 277 | 276 | 263 | 264 | 264 | 293 | 267 | 265 | 258 | 219 | 252 | 204 |
| நுவரெலியா | 243 | 241 | 233 | 242 | 227 | 276 | 243 | ★ | ★ | ★ | 188 | ★ |
| காலி | 278 | 276 | 264 | 264 | 262 | 302 | 267 | 265 | 258 | 239 | 253 | 205 |
| மாத்தறை | 274 | 273 | 263 | 265 | 265 | 288 | 266 | 265 | 258 | 241 | 252 | 205 |
| ஹம்பாந்தேட்டை | 266 | 269 | 255 | 268 | 253 | 294 | 267 | 265 | 258 | 232 | 243 | 186 |
| யாழ்ப்பாணம் | 280 | 265 | 265 | 266 | 267 | 264 | 267 | 265 | ★ | 236 | 248 | 206 |
| கிளிநொச்சி | 273 | 270 | 259 | 259 | 562 | 243 | 267 | 265 | ★ | 221 | 217 | 197 |
| மன்னார் | 248 | 217 | 219 | 246 | 224 | 243 | 248 | ★ | ★ | ★ | 184 | ★ |
| முல்லைத்தீவு | 284 | 264 | 262 | 266 | 264 | 263 | 267 | ★ | ★ | 214 | 220 | 206 |
| வவுனியா | 266 | 256 | 259 | 264 | 260 | 258 | 267 | 265 | ★ | 229 | 240 | 200 |
| திருகோணமலை | 246 | 245 | 237 | 261 | 238 | 272 | 258 | ★ | ★ | 207 | 224 | 187 |
| மட்டக்களப்பு | 259 | 251 | 254 | 266 | 253 | 251 | 267 | 265 | ★ | 234 | 235 | 186 |
| அம்பாறை | 257 | 256 | 245 | 265 | 246 | 282 | 267 | 265 | ★ | 214 | 242 | 198 |
| புத்தளம் | 264 | 272 | 260 | 265 | 257 | 289 | 266 | 265 | 258 | 220 | 238 | 182 |
| குருணாகல் | 274 | 273 | 262 | 265 | 263 | 298 | 266 | 265 | 258 | 238 | 249 | 196 |
| அனுராதபுரம் | 259 | 257 | 248 | 260 | 247 | 279 | 259 | ★ | ★ | 296 | 240 | ★ |
| பொலன்னறுவை | 246 | 242 | 236 | 236 | 231 | 280 | 250 | 265 | ★ | ★ | 209 | ★ |
| பதுளை | 262 | 267 | 259 | 259 | 250 | 286 | 263 | ★ | 258 | 206 | 224 | 181 |
| மொனராகல | 254 | 253 | 248 | 261 | 438 | 269 | 262 | ★ | ★ | ★ | 207 | ★ |
| கேகாலை | 275 | 272 | 262 | 265 | 262 | 291 | 266 | 265 | 258 | 229 | 245 | 207 |
| இரத்தினபுரி | 271 | 275 | 258 | 264 | 259 | 284 | 267 | 265 | 258 | 226 | 237 | 195 |

குறிப்பு: ★ இக்குறியீடு இட்ட இடங்கள் NQC குறிக்கும்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு

# கோண்டாவில்; இளம் பெண்சடலம் இதுவரை இனம்காணப்படவில்லை

## துப்பு துலக்க உதவுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு கோண்டாவில் கிழக்கில் பால்டண்ணை வீதியில் சட்டை ஆலடிச் சுடலையில் கண்டெடுக்கப்பட்ட இனந்தெரியாத இளம் பெண்ணின் சடலம் தொடர்பாக நேற்று வரை எவரும் அடையாளம்காட்ட முன்வரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கோரமான முறையில் கொலை செய்யப்பட்ட பெண்ணின் தலையில் நெற் ஒன்று காணப்படுவதால் அவர் ஒரு கிறிஸ்தவப் பெண்ணாகஇருக் [illegible] என்றும் சறுப்பு நிற [illegible] ள்ளாடை, வெள்ளை நிற [illegible] டை, வெள்ளை நிற நிக்கா, மற்றும் தோடுகள் அணிந்திருந்ததாகவும் இவரது ஆடைகளில் ஆங்கில எழுத்துக்கள் ஆங்காங்கே இருக்கக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரேத பரிசோதனையின் போது இவரது கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டதற்கான ஆதாரமாக இவரது கழுத்தில் நெரிக்கப்பட்ட அடையாளம் காணப்படுவதாகவும்,

இந்த இளம் பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் இருந்தபோதும் அதனைப் பூரணமாக ஊர்ஜிதம் செய்வதற்கு மேலதிக பகுப்பாய்வு செய்ய இங்கே வசதிகள் இல்லை எனவும் இத்தகையபகுப்பாய்விற்கு சடலத்தை கொழும்புக்கு அனுப்பவேண்டுமென்றும்இதனை யாழ். நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை சட்டவைத்திய அதிகாரிகள் அறிக்கை கிடைக்கப் பெற்றதும், இது தொடர்பாக தக்க நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக யாழ்.மாவட்ட நீதிபதி இ.த. விக்னராசா தெரிவித்தார்.

இவ் இளம் பெண் கொலை தொடர்பான விசாரணைகளில் துப்புத்துலக்குவதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்றும் பொலிசார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். புலன் விசாரணை தொடாகிறது. (வ-12)

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
காலை 10-30 பி.ப. 2-30
விஜயகாந் தேவயாணி
ரகுவரன் வடிவேல்
நடித்த
வல்லரசு
CD பிரதி வெளியீடு

### எதிர்க்கட்சி,..

கட்சிகளுடனும் நாளை கலந்துரையாடுவதற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையின் உள் நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தலையிடுவதற்கு ஆளும் கூட்டணிக் கட்சிகள் விருப்பம் தெரிவித்திராதபோதும்மனிதாபிமான அடிப்படையில் இலங்கைக்கு உதவவேண்டுமென ஒருமித்த கருத்து அங்கு நிலவுவதாகவும் அதை அடுத்தே எதிர்க்கட்சிகளுடனான பேச்சுக்கு பிரதமர் அழைப்புவிடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது,

இலங்கைக்கு எவ்வகையான உதவிகளை வழங்கலாம் என இச்சந்திப்பின் போது ஆராய்ந்து முடிவு வெடுக்கப்பட உள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ-ச)

### எடுத்துச் செல்ல...

உள்ள அப்பகுதி கிராம சேவையாளரிடம் எடுத்துச் செல்ல சைக்கிளில் ஏற்றிய போதே இக்குண்டு வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது:

இக்குண்டு வெடிப்பின் போது காயமடைந்தவர் விபரம் பின்வருமாறு.

மகாலிங்கம் செல்வராசா (வயது 25) துன்னாலை கிழக்கு சிவலிங்கம் சிவகரன் (வயது21) இவரது மனைவி சி. கோமதி (வயது20) இவரது ஒரு மாத மகளான சி. கஸ்தூரி ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (வ-52)

### பிரதி அமைச்சர்...

தம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நாட்டில் யுத்த நிலைப் பிரகடனம் குறித்தும் பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் ஆகியவற்றால் ஏற்படக் கூடிய பாதக நிலை குறித்தும் ஐ.தே.கட்சி எடுத்துக் கூறவுள்ளதாகவும் அதற்காக குழு ஒன்றை நியமிக்கப்பட்டு இக்குழு திங்கட்கிழமை முதல் தமது பணியை ஆரம்பிக்கும் என்றும் ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது. (வ-ச

## சூட்டுச் சத்தம்

(யாழ்ப்பாணம்)

நேற்று இரவு 7.45மணியளவில் மண்டைதீவை சார்ந்த பகுதியில் குறிப்பிட்ட சில நிமிடங்கள் தொடர்ச்சியான சூட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தது.

இதன் மேலதிக விபரங்கள் எதுவும் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை. (ந)

### இந்திய ...

பதிகள், கூட்டுப்படைகளுக்கான கட்டளை இடும் அதிகாரி லெப்டினட் ஜெனரல் றொஹான்தலுவத்த ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

விடுதலைபுலிகளுடன் போர் நடபெற்றுக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இந்தியாவின் உதவி தேவை என இலங்கை அரசு வேண்டுகோள் விடுத்திருக்கும் இவ்வேளையில் இந்திய விமானப்படைத் தளபதியின் கொழும்பு விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். (வ)

### இலங்கைக்கு இந்திய...

சென்னையில் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த ஜெயலலிதா மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு இந்தியா படைகளை அனுப்பக்கூடாது என்றும் மனிதாபிமான உதவிகளையே வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (வ-ச)

### இலங்கைக்கு...

யாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான உதவியென்றால் எவ்வித உதவியை இந்தியா வழங்கும் என்று செய்தியாளர்கள் கேட்ட போதே பெர்னாண்டஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவ உதவியை இலங்கை கேட்டதா என்று கேட்டதற்கு இந்தியாவிடம் யாரும் இராணுவ உதவியைக் கோரவில்லை என்று அவர்தெரிவித்தார். (வ-ச

## புலிகள் தாக்குதல்

(கொழும்பு)

நாகர் கோவில், பளைப் பகுதிகளில் நேற்றுவிடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தியதாக பாதுகாப்புநடவடிக்கைத் தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது. (வ-4)

### இலங்கைக்குழு.

ஏற்படுத்துவது தொடர்பான இலங்கையின் அறிவிப்பால் இஸ்ரேல் மகிழ்ச்சி அடைந்திருப்பதாக இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் டேவி லெவி கூறியுள்ளார். (வ)

### துன்பப்படும்...

வித்துள்ளார்.

இலங்கை அரசுக்கு இந்தியா உதவ முன்வந்திருக்கின்றது. ஆனால் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் தமிழ் மக்கள் மருந்துப் பொருட்களின்றியும் அத்தியாவசியப் பொருட்களின்றி அவதிப்படுகிறார்கள் அரசுக்கு உதவ முன்வந்த இந்தியா இம் மக்களுக்கும் மனிதாபிமான உதவிகளை வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்.

அத்தோடு சண்டை நடைபெறும் யாழ்ப்பாணத்தில் சிக்கியுள்ள மக்களை மீட்கவும் இந்தியா முன்வர வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை தனிப்பட்ட பயணம் மேற்கொண்டு த. வி, கூ. செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் இந்தியா சென்றுள்ளார். (வ-2)

நாகம்ஸ்
சுன்னாகம்
விஜய், ஷாலினி
ரகுவரனின்
கண்ணுக்குள் நிலவு
(ரீல்ஸ்)
காட்சி 11-00—2-30
(புதிய நேரம்)
(கி/286)

இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரி [illegible] 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் [illegible] அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் [illegible] 07-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.